**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சிவகங்கை.**

**MCOP.No. 53/2022**

**RW.2**

*****

2025 ஆண்டு ஏப்ரல் திங்கள் 08-ம் நாள் மனுதாரர்/எதிர்மனுதாரர் என்பவரின் சாட்சியான வாக்குமூலம் 1956 ஆண்டு 10 வது விதியின்படி திரு. குணசேகரன், Grade II Bench Clerk (தலைமை எழுத்தர்) என்பவரால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **சிவசுப்பு** | **தந்தை பெயர்** | : | **மூக்கையன்** |
| **கிராமம்** | : | **பாலவநத்தம்** | **தாலுகா** | : | **அருப்புக்கோட்டை** |
| **தொழில்** | : | **சார்பு ஆய்வாளர்** | **வயது** | : | **28/2025** |

---

**முதல் விசாரணை**

**<u>08.04.2025</u>**

நான் சம்மனின் பேரில் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். நான் தற்போது இளையான்குடி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல்நிலைய குற்ற எண்.301/2021 பிரிவு 279, 337 இதச வழக்கை பொறுத்து புலன் விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது. குற்ற இறுதி அறிக்கை இன்னும் தாக்கல் செய்யவில்லை.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1வது எதிர் மனுதாரர் ஜோஸ்வா டேனியல் ராஜ் என்பவரின் மீது புகார் கொடுத்தால் அவர் மீது முதல் தகவல் அறிக்ை பதிவு செய்யப்பட்டது. 2 ம் எதிர்மனுதாரர் பீட்டர் அலங்காரதம்புராஜ் என்பவர் ஜோஸ்வா டேனியல் ராஜ் என்பவரின் தகப்பனார் என்றால் ஆமாம். இந்த விபத்து சமயத்தில் 2 ம் எதிர்மனுதாரர் பீட்டர் அலங்காரதம்புராஜ் என்பவர் சாலைகிராமம்

காவல்நிலையத்தில் பணிபுரிந்து வந்தார் என்றால் அப்போது நான் காவல்நிலையத்தில் பணிபுரியவில்லை. அவர் தற்போது உலகம்பட்டி காவல்நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.04.08 13:44:22 +0000